செய்தி வெளியீடு எண் : 174 நாள் : 26.01.2024

# குடியரசுத் திருநாளையொட்டி சுதந்திரப் போராட்ட தியாகிகளின் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை ! தமிழ்நாடு அரசின் செய்தித் துறை ஏற்பாடுகளுக்கு பொதுமக்களின் மனம் திறந்த பாராட்டு !

நமது நாட்டின் சுதந்திரப் போராட்ட தியாகிகளான வீரபாண்டிய கட்டபொம்மன், மாவீரர்களான மருது பாண்டியர்கள், கப்பலோட்டிய தமிழர், வ.உ.சி., மகாகவி சுப்பிரமணிய பாரதியார், நாமக்கல் கவிஞர் ராமலிங்கபிள்ளை, முத்துராமலிங்க தேவர் முதலான தியாகப் பெருமக்கள் அனைவருக்கும் தமிழ்நாடு முழுவதிலும் சிலைகள், நினைவுச் சின்னங்கள், மணிமண்டபங்கள் என அமைத்து அவர்களின் தியாகங்களைப் போற்றி வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு.மு.க.ஸ்டாலின்** அவர்களின் அறிவுரைப்படி இந்த ஆண்டின் குடியரசுத் திருநாளில் தியாக பெருமக்களின் சிலைகளுக்கு அலங்காரம் செய்து மாலை அணிவித்து மரியாதை செய்திட தமிழ்நாடு அரசின் செய்தித் துறை இயக்குநர் ஏற்பாடு செய்துள்ளார்.

இதனை தமிழ்நாடு எங்கும் தியாகிளும் பொதுமக்களும் அரசியல் இயக்கத் தலைவர்களும் பார்வையிட்டு; தமிழ்நாடு அரசை, குறிப்பாக, செய்தித் துறையைப் பாராட்டுகின்றனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in